





# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"








Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 289 | 12.04.2026 | SUNDAY | PANGUNI: 29 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 289 | 12.04.2026 | ஞாயிற்றுக்கிழமை | பங்குனி : 29 | விலை : ரூ.5/–


# "234 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம்!"



புதுக்கோட்டை: ஏப்.12-

"200 தொகுதியில் வெற்றி பெறுவோம் என்று ஏற்கெனவே தெரிவித்து இருந்தோம். தற்போதுள்ள மக்கள் வரவேற்பையும், கூட்டத்தையும் பார்க்கும்போது, 234 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது," என திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் போட்டியிடும் திமுக வேட்பாளர்கள் திருமயம் எஸ்.ரகுபதி, ஆலங்குடி சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வை.முத்துராஜா, விராலிமலை கே.கே. செல்லபாண்டியன், கந்தர்வக்கோட்டையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர் எம்.சின்னதுரை மற்றும் அறந்தாங்கியில் காங்கிரஸ் வேட்பாளர் எஸ்.டி.ராமச்சந்திரன் ஆகியோரை ஆதரித்து புதுக்கோட்டையில் மாலை 4 மணிக்கு பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

இதையடுத்து, தஞ்சாவூரில் நேற்று பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு புதுக்கோட்டை



சிவபுரத்தில் உள்ள தனியார் கல்லூரியில் தங்கினார்.

பின்னர், புதுக்கோட்டையில் நடைபயிற்சி மேற்கொண்ட அவர், விராலிமலை தொகுதிக்கு உட்பட்ட இலுப்பூர் கடைவீதியில் கூடியிருந்த பொதுமக்களை சந்தித்து திமுக வேட்பாளருக்கு வாக்கு சேகரித்தார். அங்கு வந்த தனியார் பேருந்திலும் ஏறி பயணிகளிடம் வாக்கு சேகரித்தார். அப்போது, செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

தேர்தலில் திமுக கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு அமோகமாகவும், சிறப்பாகவும் இருக்கிறது. அதிமுக பொதுச் செயலாளர் தோல்வியின் உச்சத்துக்கு சென்றுவிட்டதால் விரக்தியில் தமிழக அரசு நிதி மேலாண்மையை முறையாகக் கையாளவில்லை என்று பேசி இருக்கிறார். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை.

200 தொகுதியில் வெற்றி பெறுவோம் என்று ஏற்கெனவே தெரிவித்து இருந்தோம். தற்போதுள்ள மக்கள் வரவேற்பையும், கூட்டத்தையும் பார்க்கும்போது, 234 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

பாஜகவில் இருந்து எத்தனை பேர் வந்தாலும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியை யாராலும் வெல்ல முடியாது. தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளை மாற்றி உள்ளனர். இது போன்று எதை வேண்டுமானாலும் செய்யட்டும், இதற்கு மேலும் செய்வார்கள். அதைப் பற்றி நாங்கள் கலவைப்படமாட்டோம்.

கட்சியை டெல்லியில் அடமானம் வைத்துவிட்டு அதிமுகவினர் அடிமையாகி விட்டனர். அதனால் அவர்களை டெல்லி தான் இயக்குகிறது. அதிமுக என்ற திராவிட கட்சி இப்படிப் போனதை நினைத்து வெட்கப்படுகிறோம், வேதனைப்படுகிறோம்.

நடிகர் உள்ளிட்ட யார் வந்தாலும் நாங்கள் கவலைப்படவில்லை. நாங்கள் எங்கள் வேலையை பார்த்துக்கொண்டு இருக்கிறோம். நடிகர் பின்னால் சென்று விபத்துக்கள் நேரிடுவதை நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறு நடிகர் பின்னால் செல்லும் இளைஞர்கள் விரைவில் திருந்துவார்கள். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

## திமுக கூட்டணி கேலிக்கூத்தான கூட்டணி: பழனிசாமி கடும் தாக்கு

தென்காசி, ஏப்.12-

திமுக கூட்டணி ஒரு கேலிக்கூத்தான கூட்டணி என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கேள்வி எழுப்பி உள்ளார்.

காஞ்சிபுரம் சட்டப்பேரவைத் தொகுதி அதிமுக வேட்பாளர் வி.சோமசுந்தரம், உத்திரமேரூர் வேட்பாளர் பெ.மகேஷ்குமார், ஸ்ரீபெரும்புதூர் வேட்பாளர் பழனி ஆகியோரை ஆதரித்துத் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் காஞ்சிபுரம் தேரடி பகுதியில் நடைபெற்றது.

இதில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி பேசியதாவது: கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக மீண்டும் ஆட்சி அமைக்க வேண்டிய சூழல் நிலவியது. ஆனால், கட்சிக்குள் இருந்த சிலரே திமுகவின் கைக்கூலிகளாகச் செயல்பட்டு சூழ்ச்சி செய்து ஆட்சி அமைவதைத் தடுத்தனர். கட்சியின் ஒருங்கிணைப்பாளர் பதவி மூலம் அடையாளம் பெற்றவர்கள், தற்போது வெட்கமே இல்லாமல் எம்.ஜி.ஆரால் 'தீய சக்தி' என வர்ணிக்கப்பட்ட திமுகவில் இணைந்து துரோகம் செய்துள்ளனர்.

திமுக காங்கிரஸ் கூட்டணிப் பேச்சுவார்த்தை 20 நாட்கள் இழுபறியாக நீடித்தது. ஒருவரை ஒருவர் விமர்சித்துக் கொண்டனர். ஆனால் அதிமுக கூட்டணி மிகவும் சுமுகமான முறையில் உடன்பாட்டை எட்டியது. இது ஒரு இயற்கையான கூட்டணி. திமுக கூட்டணியில் மதிமுக அவைத் தலைவர் 'அழுதுகொண்டே சிரிக்கிறோம்' என்கிறார்.

கம்யூனிஸ்டுகள் கடந்த முறை வெற்றி பெற்றும் மக்கள் பிரச்சினையைப் பேசாமல் திமுகவுக்கு ஜால்ரா போட்டதால், இந்த முறை அவர்களுக்கு ஒரு தொகுதி குறைக்கப்பட்டுள்ளது. விசிக வேட்பாளர் தன்னை ஒரு காங்கிரஸ்காரர் என்கிறார். இப்படி திமுக கூட்டணி ஒரு 'கேலிக்கூத்தான கூட்டணியாக' உள்ளது.

உதயநிதி ஸ்டாலின் தேவையற்ற விமர்சனங்களை முன்வைக்கிறார். நான் யார் பெயரையும் குறிப்பிடாமல் ஒரு விஷயத்தைச் சொன்னால், 'எங்க அப்பன் குதிருக்குள் இல்லை' என்பது போல தன்னைச் சொன்னதாக எடுத்துக் கொள்கிறார். அவரது நெஞ்சில் உள்ள குற்றம் புரிகிறது. ஒரு நடிகையின் ஆசைக்காகப் பல கோடி அரசுப் பணத்தைச் செலவழித்து சென்னையில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதியில் கார் ரேஸ் நடத்தியதைத் தவிர உதயநிதி தமிழ்நாட்டிற்கு என்ன செய்தார்?

2021 தேர்தலிலேயே மகளிருக்கு ரூ. 1,500 வழங்கப்படும் என அதிமுக அறிவித்தது. அதை ஸ்டாலினுக்குப் படிக்கத் தெரியவில்லை என்றாலும், உதயநிதியாவது படித்துப் பார்க்கட்டும். அதிமுக கொடுத்த அழுத்தத்தினால் தான் தற்போது மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன், மகளிருக்கு மாதந்தோறும் ரூ. 2,000 உரிமைத் தொகை நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

கரோனா காலத்தில் நிதி நெருக்கடி இருந்தபோதும் 40 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்து மக்களைக் காத்தோம். ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகள், 6 சட்டக் கல்லூரிகள் கொண்டு வந்தோம். உயர்கல்வியில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றினோம். ஸ்டாலின் அதிமுக ஆட்சியை இருண்ட காலம் என்கிறார். கண்ணை மூடிக்கொண்டு பார்த்தால் உலகம் இருட்டாகத் தெரியும்.

பாஜகவுடன் திமுக கூட்டணி வைத்தபோது அது சரியாகத் தெரிந்த அவர்களுக்கு, அதிமுக வைத்தால் மட்டும் தவறா? ஏமாற்றுவதற்கு ஒரு குடும்பம் உண்டு என்றால் அது கருணாநிதி குடும்பம் தான். மக்கள் விரோத திமுக ஆட்சியை வீழ்த்தி, அதிமுக அமோக வெற்றி பெறுவது உறுதி. இவ்வாறு அவர் பேசினார்.

## ஓட்டப்பிடாரம் தொகுதி

# கலக்கும் குக்கர்! பதட்டத்தில் திமுக!

### மாறுகிறதா அரசியல் கணக்கு? இரண்டாம் கட்ட தேர்தல் நிலவரம்!

ஓட்டப்பிடாரம், ஏப்.12

தூத்துக்குடி மாவட்டத்தின் நட்சத்திரத் தொகுதியான ஓட்டப்பிடாரத்தில், 2026 தேர்தல் களம் இரண்டாம் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், தற்போதைய நிலவரப்படி அங்குப் பலமுனைப் போட்டிகள் மற்றும் எதிர்பாராத திருப்பங்கள் நிலவி வருகின்றன.

1. வெளியூர் வேட்பாளர் சர்ச்சை:

திமுக சார்பில் போட்டியிடும் குரும்பூர் ராமஜெயம், "தொகுதிக்குச் சம்பந்தமில்லாத வெளியூர் வேட்பாளர்" என்ற முத்திரை குத்தப்பட்டுள்ளார். ஏற்கனவே தொகுதியில் செல்வாக்குடன் இருந்த இளையராஜா, அம்பா சங்கர் ஆகியோரைப் புறக்கணித்துவிட்டு, அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனின்




ஆதரவாளர் என்பதால் இவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டதாகத் தொண்டர்களிடையே அதிருப்தி நிலவுகிறது.

2. சண்முகய்யாவின் 'மூவ்':

வாய்ப்பு மறுக்கப்பட்ட முன்னாள் எம்.எல்.ஏ சண்முகய்யா, தமிழக வெற்றிக் கழகத்தில் இணைய முயன்றதாகக் கூறப்படும் செய்திகள் திமுக தலைமையைத் தலைவலியில் ஆழ்த்தியுள்ளது. அவர் சுயேச்சையாகவோ அல்லது தவெக ஆதரவிலோ களம் இறங்கினால், திமுகவின் வாக்கு வங்கியில் பெரும் சரிவு ஏற்படும் எனத் தெரிகிறது.

3. குக்கர் சின்னத்தின் வேகம்:

தற்போது ஓட்டப்பிடாரம் தொகுதியில் 'குக்கர்' சின்னம் மிகவும் செல்வாக்கு பெற்று வருவதாக உளவுத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன. இது ஆளுங்கட்சி மற்றும் பிரதான எதிர்க்கட்சிகளைப் பெரும் பதட்டத்தில் ஆழ்த்தியுள்ளது. மாநகராட்சிப் பகுதியில் உள்ள 40,000 வாக்குகளை மட்டுமே நம்பியிருக்கும் திமுகவிற்கு, கிராமப்புறங்களில் குக்கர் சின்னம் தரும் வேகம் பெரும் சவாலாக மாறியுள்ளது.

{சக்கர வியூகம் செய்தியாளர் குழு)

## தமிழக தேர்தல் களத்தில் 4,023 வேட்பாளர்கள்

சென்னை, ஏப்.12-

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் 4,023 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். எண்ணிக்கைக் கேற்ப நேற்று கூடுதல் வாக்குப்பதிவு இயந்திரங்கள், தொகுதிவாரியாக பிரித்து அனுப்பப்பட்டன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் கடந்த மார்ச் 15ம் தேதி அறிவிக்கப்பட்டது. மார்ச் 30ம் தேதி வேட்புமனு தாக்கல் தொங்கியது. ஏப்.6ம் தேதியுடன் வேட்புமனு தாக்கல் நிறைவடைந்தது. 234 தொகுதிகளில் மொத்தம் 7,599 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

7ம் தேதி வேட்பு மனுக்கள் பரிசீலனை நடைபெற்றது. இதில் 5,139 வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டன. முறையாக பூர்த்தி செய்யப்படாத 2,460 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

வேட்புமனுக்களை திரும்பப் பெற கடந்த ஏப் .9ம் தேதி வரை அவகாசம் வழங்கப்பட்டது. இதில் சுமார் 500க்கும் மேற்பட்ட வேட்புமனுக்கள் திரும்பப் பெறப்பட்டன. அன்றே வேட்பாளர்கள் எண்ணிக்கை இறுதி செய்யப்பட்டது. அதன்படி, தமிழக தேர்தல் களத்தில் 4,023 வேட்பாளர்கள் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

இதில் அதிகபட்சமாக சென்னை மாவட்டத்தில் உள்ள 16 தொகுதிகளில் 419 வேட்பாளர்கள், சேலம் மாவட்டத்தில் உள்ள 11 தொகுதிகளில் 193 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

சென்னையில் அதிகபட்சமாக பெரம்பூர் தொகுதியில் 47 வேட்பாளர்களும் குறைந்தபட்சமாக சைதாப்பேட்டையில் 15 பேரும் போட்டியிடுகின்றனர்.

வேட்பாளர் எண்ணிக்கை உறுதியானதைத் தொடர்ந்து, கூடுதலாக தேவைப்படும் வாக்குப் பதிவு இயந்திரங்கள் அந்தந்த மாவட்ட அளவில் நேற்று, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இணையவழி குலுக்கல் மூலம் தொகுதிவாரியாக பிரிக்கப்பட்டு, ஏற்கெனவே வைக்கப்பட்டுள்ள இயந்திரங்களோடு பாதுகாப்பாக வைக்கப்பட்டன.

## 'ஜனநாயகன்' இணையத்தில் வெளியானது பற்றி சிபிஐ விசாரணை கோர விஜய் தயாரா? : பாஜக கேள்வி

சென்னை, ஏப்.12-

ஆதவ் அர்ஜுனா மூலம் 'ஜனநாயகன்' படத்தை வெளியிட வைத்து விஜய் நடத்தும் சதி அரசியல் நாடகம் எடுபடாது என்று தெரிவித்துள்ள தமிழக பாஜக, படம் வெளியானது குறித்து சிபிஐ விசாரணை கோர தயாரா என்றும் சவால் விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழக பாஜக செய்தித் தொடர்பாளர் ஏ.என்.எஸ். பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில், "'ஜனநாயகன்' படம் இணையத்தில் வெளியானதால் ரூ.500 கோடிக்கு மேல் தயாரிப்பாளருக்கு இழப்பு ஏற்படும் என்று சமூக வலைத்தளங்களில் விளம்பரப்படுத்தி, மக்களை ஏமாற்றி பரிதாப வாக்குகளைப் பெற விஜய் நாடகம் ஆடுகிறார்.

பாஜக மீதும் மத்திய அமைச்சர் எல். முருகன் மீதும் பொய் குற்றம் சாட்டியுள்ளார். தமிழகத்தின் பட்டியல் சமூக பிரதிநிதியாக நேர்மையோடு செயல்படும் மத்திய அமைச்சர் எல். முருகனை அவமதிக்கும் நோக்கத்துடன், அவதூறு பரப்பிவிட்டு அம்பேத்கர் தான் எங்கள் கொள்கை தலைவர் என்று கூறுவதற்கு விஜய் வெட்கப்பட வேண்டும். இது குறித்து சிபிஐ விசாரணையை கோர விஜய் தயாரா?

ஜனநாயகன் திரைப்படம் இணையத்தில் வெளியானது குறித்து தமிழக காவல்துறையில் இதுவரை ஏன் புகார் அளிக்கப்படவில்லை? சென்சார் போர்டிலும் ஏன் முறையிடவில்லை?

ஜனநாயகம் திரைப்படம் இணையத்தில் கசிந்ததற்கு மத்திய அமைச்சர் முருகனும் காரணம் என்று ஆதவ் அர்ஜுனா கூறி இருப்பது வடிகட்டிய பொய். அவர் மீது பாஜக சட்ட நடவடிக்கைகளை எடுக்கும்.

எம்ஜிஆரையும் விஜயையும் இணைத்து பேசி அதிமுக ஓட்டுக்களை பிரிக்கலாம் என்றும், ஜனநாயகன் படம் விவகாரத்தில் பாஜகவிற்கு எதிராக அவதூறு பேசி வாக்காளர்களை குழப்பி ஆதாயம் தேடலாம் என்றும் ஆதவ் அர்ஜுனா கருதுகிறார். கீழ்த்தரமான அவரது இந்த பகல் கனவு பலிக்காது.

திமுகவுக்கு ஓட்டு போடுவது தற்கொலைக்குச் சமம் என்பதை தமிழக மக்கள் உணர்ந்து விட்டார்கள். திமுகவை வீழ்த்த வேண்டும் என்று நினைக்கின்ற வாக்காளர்கள் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கே வாக்களிப்பார்கள்" என தெரிவித்துள்ளார்.



## வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தேர்தல் பணிமனையை திமுக வேட்பாளர் ராஜா திறந்து வைத்தார்

சிவகிரி, ஏப்.12-

வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தேர்தல் பணிமனையை திமுக வேட்பாளர் ராஜா திறந்து வைத்தார். நிகழ்ச்சியில்தென் காசி எம்பி ராணி ஸ்ரீகுமார், மதிமுக மாநிலமருத்துவரணி செயலாளர் டாக்டர் சதன் திருமலைக்குமார் எம்எல்ஏ, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் சவுக்கை சீனிவாசன், பரமகுரு, தொகுதி பொறுப்பாளர் டாக்டர் செண் பக விநாயகம், ஒன்றிய செய லாளர்கள் பொன் முத்தையா பாண்டியன், அன்புக்கரசு வெள்ளத்துரை, பொதுக்குழு உறுப்பினர்கள் தேவதாஸ், வேல்சாமி பாண்டியன், நகர செயலாளர்கள் அந்தோணி சாமி, நாகூர்கனி, மாவட்ட அவைத் தலைவர் சுப்பையா, மாவட்ட துணை செயலாளர் மனோகரன், சார்பு அணி அமைப் பாளர்கள் கிப்ட்சன், பிச்சையா, பேரூர்செயலாளர்கள் ரூபி பாலசுப்ரமணியன், கேடிசிகுருசாமி, நல்லசிவன், கந்தவேல், சேதுசுப்ரமணியன், சிபிஎம் ஒன்றிய செயலாளர் நடராஜன், காங்கிரஸ் வட்டாரத்தலைவர் மகேந்திரா, மமக மாவட்ட செயலாளர் அப்துல் ரஹ்மான், செய்யது அலி, பாதுஷா, முகம்மதுஅலி, சார்பு அணி துணை அமைப்பாளர்கள் கட்டபொம்மன், முத்துக் குமார், சுந்தர், சங்கர், முஸ்லிம்லீக் நகர தலைவர் கார்த்திக், பொன்னுதுரைச்சி, சாகுல்ஹமீது,மாவட்டதலைவர் அப்துல் அஜீஸ், வர்த்தக அணி தலைவர் செய்யது சுலைமான், மாவட்ட திட்டக் குழு உறுப்பினர் சரவணன். மதிமுக நகரசெயலாளர் மாரியப்பன்,சுமங்கலி சங்கர், முன்னாள் மாவட்டச் செயலாளர் மூர்த்தி பாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



## "உங்கள் வீட்டுப் பிள்ளைக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள்" உருக்கமாக வேண்டிய தென்காசி தொகுதி திமுக வேட்பாளர்!

தென்காசி, ஏப்.12-

தென்காசி சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் டாக்டர் கலைக்கதிர்வன், தனது சொந்த ஊரான சுப்பையாபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில், வாக்குச் சேகரிக்க வந்த 'மண்ணின் மைந்தன்' டாக்டர் கலைக்கதிர்வனுக்கு, அந்த ஊர் பெண்கள் திரண்டு வந்து மலர் தூவியும், ஆரத்தி எடுத்தும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அருணாச்சலபுரம், அய்யாபுரம், ஆணைகுளம் உள்ளிட்ட பகுதிகளில் பிரச்சாரம் செய்த அவர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலைக்கு மாலை அணிவித்ததுடன், அங்குள்ள விநாயகர் கோவில் மற்றும் தேவாலயங்களுக்குச் சென்று வழிபாடு நடத்தினார். "நான் இந்த ஊர்க்காரன் இல்லை என்று சிலர் வதந்தி பரப்புகிறார்கள். உங்கள் குறைகளைத் தீர்க்க உங்கள் வீட்டுப் பிள்ளையான நான் எப்போதும் இருப்பேன்" எனப் பிரச்சாரத்தின் போது அவர் உணர்ச்சிவசப்படப் பேசினார். குலையநேரி கிராமத்தில் மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் வேட்பாளர் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வழக்கறிஞர் பொ.சிவபத்மநாதன், கடையநல்லூர் தெற்கு ஒன்றிய செயலாளர் ஜெயா ஐயப்பன், ஒன்றிய பொறியாளர் அம்மையாபுரம் முத்துராஜ், ஆனைகுளம் அண்ணாமலைகனி, திருநாவுக்கரசு, கணேசன் மற்றும் திமுக, காங்கிரஸ், மதிமுக, கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.




## தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம்: 14 அம்ச தீர்மானங்கள் நிறைவேற்றம்

சேலம், ஏப்.12-

உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம், மாநில தலைவர் வேலுசாமி தலைமையில், சேலம் புதிய பேருந்து நிலையம் எதிரே உள்ள தனியார் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மாநில துணைத் தலைவர்கள் ராஜபெருமாள், மூர்த்தி, மாநில செயலாளர் கணபதி, மாநில துணைப் பொது செயலாளர் சேட்டு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில செயற்குழு கூட்டத்தில் பங்கேற்க வந்த அனைவரையும் மாநில பொதுச் செயலாளர் ஏழுமலை வரவேற்றார். கூட்டத்தின் இறுதியில் மாநில பொருளாளர் மோகன் குமார் நன்றி உரையாற்றினார்.

கூட்டத்தில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டு மொத்தம் 14 அம்ச தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மூலம், "உழவு இல்லையேல் இவ்வுலகம் இல்லை; உழவன் சிரிப்பில் உலகம் செழிக்கட்டும்" என்ற கோஷத்துடன், விவசாயிகள் நலனுக்கான கோரிக்கைகளை அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என சங்கம் வலியுறுத்தியுள்ளது.

## அதிமுக ஆட்சியில் தாலிக்கு தங்கம், இலவச மடிக்கணினி! திமுக ஆட்சியில் வெறும் ஸ்டிக்கர் தான்!" ஆர்.பி. உதயகுமார் ஆவேசப் பேச்சு



வாடிப்பட்டி, ஏப்.12-

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகே உள்ள போடிநாயக்கன்பட்டி கிராமத்தில் அதிமுக நகரச் செயலாளர் டாக்டர் சோ. அசோக்குமார் தலைமையில் முன்னாள்முப்பெரும் துறை அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சோழவந்தான் தொகுதி அதிமுக வேட்பாளர் மாணிக்கத்தை ஆதரித்து பொதுமக்களிடம் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

அவர் பேசியது. கடந்த அதிமுக ஆட்சியில் அம்மா கொண்டு வந்த திட்டங்கள் ஏராளமானது தாலிக்கு தங்கம் அரசுபள்ளி மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினி, சைக்கிள், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் விவசாய கடன் தள்ளுபடி உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை கொடுத்தவர் புரட்சித்தலைவி அம்மா.

அவரை தொடர்ந்து நான்கு ஆண்டு ஆட்சி செய்த புரட்சித் தமிழர் எடப்பாடி பழனிச்சாமி மக்களை நினைத்து ஒவ்வொரு திட்டங்களையும் செயல்படுத்தினார் அதில் உதாரணத்துக்கு கூற வேண்டும் என்றால் பொங்கல் தொகுப்பு மற்றும் 2500 ரொக்கம்மற்றும் தடையில்லா மின்சாரம் ஏழை எளியோ பொதுமக்களை பசிப்பிணியிலிருந்து காக்க கூடுதல் அம்மா உணவகங்கள் திறப்பு கொரோனா காலகட்டங்களில் அனைத்து மக்களுக்கும் நலத்திட்டங்கள் என பல எண்ணற்றத் திட்டங்களை தந்தவர் கழகப் பொதுச் செயலாளர் ஆனால் திமுக அரசின் ஸ்டிக்கர் ஒட்டும் திட்டங்களால் மக்கள் தினந்தோறும் அல்லல்படுகின்றனர். ஐந்தாண்டுகளில் என்ன செய்தார்கள் மக்களுக்கான திட்டங்களை இதுவரை எதுவும் நிறைவேற்றவில்லை.

இதில் மாநில அம்மா பேரவை துணை செயலாளர் வாடிப்பட்டி ராஜேஷ் கண்ணா, ஒன்றிய செயலாளர்கள் காளிதாஸ், கொரியர் கணேசன், கல்லணை ரவிச்சந்திரன், அரியூர் ராதாகிருஷ்ணன் நகர செயலாளர் அழகுராஜ், வி.கே.குமார், உள்பட அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## இயற்கை விவசாயிகளுக்கு இலவசமாக மரபு நெல் வழங்கத் திட்டம்; பாரம்பரியத்தை மீட்க கரம் கொடுப்பீர்!



திருப்பூர், ஏப்.12-

நமது முன்னோர்கள் பயிரிட்ட ஆரோக்கியமான மரபு விதைநெல்களை மீட்டெடுத்து, அதனை இயற்கை விவசாயிகளுக்குக் கொண்டு சேர்க்கும் நோக்கில் "கலாம் விதைகளின் விருட்சம் சமூக இயக்கம்" வரும் ஆண்டில் **'ஐந்தாம் ஆண்டு மரபு விதைநெல் திருவிழா'**வினை பிரம்மாண்டமாக நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இந்தத் திருவிழாவின் மூலம் இயற்கை விவசாயத்தில் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு, எவ்வித கட்டணமுமின்றி மரபு விதைநெல்கள் இலவசமாக வழங்கப்பட உள்ளன. பெருகி வரும் மருத்துவச் செலவுகளைக் குறைத்து, வருங்காலத் தலைமுறையினருக்கு ஆரோக்கியமான மரபு உணவுகளைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதே இந்த இயக்கத்தின் முதன்மை நோக்கமாகும். இதற்கான விதைநெல்களைச் சேகரிக்கப் பெரும் பொருள் செலவில் அர்ப்பணிப்போடு பயணம் மேற்கொண்டு வரும் இவ்வியக்கத்திற்கு, நிதி ரீதியாக உதவ விரும்புவோர் கரம் கோர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

*வேண்டுகோள்:* இயற்கை விவசாயத்தை நேசிக்கின்ற அன்பு உள்ளங்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள், இத்தொண்டுக்குத் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து, பாரம்பரிய நல்வாழ்வை மீட்டெடுக்க ஒத்துழைக்குமாறு இயக்கத்தின் *நிறுவனர் இரா. இராஜா ( செல்: 9500451569 )* அன்புடன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.





■ திருநெல்வேலி மாவட்டம் – திசையன்விளை தாலுகாவில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக 100% வாக்களிப்பை வலியுறுத்தி அழகாக வடிவமைக்கப்பட்ட கேக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன. திசையன்விளையில் இயங்கி வரும் தங்கையா ஸ்வீட்ஸ் – பேக்கரி சார்பில் "100% வாக்களிப்பு" என்ற கருத்தை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் சிறப்பு கேக் வடிவமைக்கப்பட்டது. பேக்கரியில் அமைக்கப்பட்டிருந்த இந்த கேக் காண்போரைக் கவரும் வகையில் மிகப் பிரமாண்டமாக வடிவமைக்கப்பட்டிருந்தது. இதை பலர் வந்து பார்த்து பாராட்டியும், புகைப்படம் எடுத்து ரசித்தும் சென்றனர். இந்த முயற்சி பொதுமக்களுக்கு வாக்களிப்பின் முக்கியத்துவத்தை நினைவூட்டும் விதமாக அமைந்துள்ளது.

## நஞ்சநாடு அருகே பகல் நேரத்தில் தேயிலை தோட்டத்தில் ஓய்வெடுத்த சிறுத்தையால் பரபரப்பு

ஊட்டி, ஏப்.12-

நீலகிரி மாவட்டத்தில் காட்டுமாடு, கரடி, சிறுத்தை உள்ளிட்ட வன விலங்குகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. ஆனால் அதற்கேற்ப வனப்பரப்பு இல்லாதது, வனத்தை ஒட்டிய பகுதிகளில் கட்டுமானங்கள் அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் வனவிலங்குகள் குடியிருப்பு பகுதிகளில் அடிக்கடி தென்படுவது அதிகரித்துள்ளது. அவ்வாறு வரும் சிறுத்தை உள்ளிட்ட வனவிலங்குகள் கால்நடைகளை வேட்டையாடி வருகின்றன. சில சமயங்களில் மனிதர்களையும் தாக்கும் சம்பவங்களும் ஏற்படுகின்றன. இதனால் அந்த பகுதிகளில் அவ்வப்போது மனிதவன விலங்கு மோதல் நிகழ்கின்றன. கடந்த சில நாட்களுக்கு முன் நுந்தளாமட்டம் தனியார் தேயிலை தோட்டத்தில் உள்ள ஒரு சில்வர் ஓக் மரத்தில் சிறுத்தை ஓய்வெடுத்தது.இதே போல குன்னூர் பகுதியில் காட்டுமாடு குட்டியை வேட்டையாடி மரத்தில் தொங்கவிட்ட வீடியோக்கள் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தின. இந்த பரபரப்பு அடங்குவதற்குள் ஊட்டி அருகே நஞ்சநாடு பகுதியில் தேயிலை தோட்டத்தில் சிறுத்தை ஒன்று பகல் நேரத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. அந்த வழியாக வாகன ஓட்டிகள் வந்ததை பார்த்து சற்று சுதாரித்த சிறுத்தை சிறிது நேரம் அங்குமிங்கும் நோட்டமிட்டவாறு உடனடியாக வனப்பகுதிக்குள் சென்று மறைந்தது. இந்த சம்பவத்தை அந்த வழியாக சென்ற உள்ளூர் மக்கள் புகைப்படம் எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டனர். இந்த புகைப்படம் தற்போது வைரலாகி வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி குன்னூர் பகுதிகளில் சிறுத்தை நடமாட்டம் மிகப்பெரிய அளவில் அதிகரித்திருப்பதால் பலரும் அச்சமடைந்துள்ளனர்.



■ நெல்லை மாவட்டம் ராதாபுரம் தொகுதி தேசிய முற்போக்கு கூட்டணியின் பா.ஜ.க. வேட்பாளர் பாலகிருஷ்ணன் ராதாபுரத்தில் தேர்தல் பிரச்சாரம் செய்தபோது, ராதாபுரம் ஒன்றிய அதிமுக இளைஞர் அணி செயலாளர் முருகேசன் பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.




■ தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் அமைந்துள்ள சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் 26 வது ஆண்டு விழா மிக சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு கல்லூரியின் தலைவர் பொறியாளர் ஜீசஸ் ராஜா தலைமை வகித்தார்.கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜெயக்குமார், கல்லூரியின் நிர்வாக இயக்குனர் பேராசிரியர் கனக பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இறுதியாண்டு கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை மாணவி முப்புடாதி வரவேற்புரை ஆற்றினார்.இவ்விழாவில் கல்லூரி மேலாளர் பேராசிரியர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் மாணவ மாணவியர் அலுவலகப் பணியாளர்கள் பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். இவ்விழாவினை முனைவர் முப்புடாதி சுதா மற்றும் பேராசிரியை லின்சி பாலின் ஆகியோர் சிறப்பான ஒருங்கிணைப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர். இறுதியாக மின் மற்றும் மின்னணு பொறியியல் துறை மாணவி நன்றி கூறினார். நிகழ்ச்சி நிறைவாக நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.



## திமுகவின் பொய் வாக்குறுதிகளுக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள்!" சங்கரன்கோவிலில் சசிகலாவின் அதிரடிப் பிரச்சாரம்!

சங்கரன்கோவில், ஏப்.12-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் திருவேங்கடம் சாலையில், அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்ற கழக வேட்பாளர் வசந்தி முருகேசனை ஆதரித்து அக்கட்சியின் பொதுச் செயலாளர் சின்னம்மா சசிகலா சூறாவளிப் பிரச்சாரம் மேற்கொண்டார்.


"திமுக பொய்யான வாக்குறுதிகளைச் சொல்லி மக்களை ஏமாற்றி வருகிறது. ஐந்து ஆண்டு கால வாக்குறுதிகளில் எதையுமே அவர்கள் நிறைவேற்றவில்லை என்பது சங்கரன்கோவில் தொகுதி மக்களுக்கு நன்றாகத் தெரியும். இனி மக்களை யாரும் ஏமாற்ற முடியாது" என ஆவேசமாகப் பேசினார். "தமிழகத்தில் மீண்டும் புரட்சித்தலைவி அம்மாவின் ஆட்சி அமையும். அப்போது பெண்களுக்கு முழுமையான பாதுகாப்பு கிடைப்பது உறுதி செய்யப்படும்" என வாக்குறுதி அளித்தார்.

முன்னதாக வேட்பாளர் வசந்தி முருகேசன், சின்னம்மா சசிகலாக்கு பூங்கொத்து மற்றும் 'வெற்றி வேல்' வழங்கி, தொகுதி மக்களின் ஆதரவோடு நிச்சயம் வெற்றி பெறுவோம் என உறுதி அளித்தார்.

இந்நிகழ்வில் திருநெல்வேலி மாவட்ட பஞ்சாயத்து துணை தலைவர் தர்மராஜ் தென்காசி மாவட்ட பொறுப்பாளரார் வள்ளி நாயகம் தென் காசி மாவட்டம் சங்கரன் கோவில் M.P. கோட்டூர் சாமி பாண்டியன் பசும்பொன் மக்கள் தேசம் கட்சி( P.M.T.) சுப்பிரமணியன் தென்னிந்திய பார்வேர்ட் பிளாக் தென்காசி மாவட்ட செயலாளர் அனைத்து கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் ஏராளமான பொதுமக்கள் அகியோர் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடி தொகுதியில் கெத்து காட்டப்போவது யார்?

தூத்துக்குடி, ஏப்.12-
தென் மாவட்டங்களில் அமைந்துள்ள முக்கிய தொகுதிகளில் முத்துநகர் என்றழைக்கப்படும் தூத்துக்குடி தொகுதியும் ஒன்றாகும். நாட்டின் பெருந்துறைமுகங்களில் ஒன்றான வ.உ.சி. துறைமுகம் அமைந்துள்ளது. இதனால் தென் தமிழகத்தின் தொழில் நகரமாக தூத்துக்குடி விளங்கி வருகிறது.



**17வது தேர்தல்**

தூத்துக்குடி தொகுதி இதுவரை 16 தேர்தல்களை சந்தித்துள்ளது. இதில் காங்கிரஸ் கட்சி 1952, 1957, 1962 ஆகிய 3 தேர்தல்களில் வெற்றி பெற்றுள்ளது. அதன்பிறகு திராவிட கட்சிகளே ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

திமுக 7 முறையும், அதிமுக 6 முறையும் வெற்றி பெற்றுள்ளன. இந்த தொகுதியில் வெற்றி பெற்ற எஸ்.என். ராஜேந்திரன், பி.கீதா ஜீவன், சி.த.செல்லப் பாண்டியன் ஆகியோர் அமைச்சர்களாக பொறுப்பு வகித்துள்ளனர்.

**வாக்காளர் விவரம்**

தூத்துக்குடி மாநகராட்சி பகுதியை மட்டும் உள்ளடக்கிய இந்த தொகுதியில் ஆண்கள் 1,20,614 பேர், பெண்கள் 1,27,623 பேர், மூன்றாம் பாலினத்தவர் 63 பேர் என மொத்தம் 2,48,300 வாக்காளர்கள் உள்ளனர்.

இதில் நாடார் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் 36 சதவீதம், பர்னான்டோ 19 சதவீதம், தேவேந்திரகுல வேளாளர் 9 சதவீதம், பிள்ளைமார் 8 சதவீதம், முஸ்லிம்கள் 4 சதவீதம் பெரும்பான்மை வாக்காளர்களாக உள்ளனர்.

**தீர்வு காணப்பட்டவை**

தூத்துக்குடி தொகுதியின் முக்கிய பிரச்சினையாக மழைக்காலங்களில் வெள்ளநீர் தேங்கி வந்தது. இதனால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். ஆனால், இந்த பிரச்சினைக்கு தற்போது ஓரளவுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழையின் போது பெரிய அளவில் பாதிப்பு இல்லாமல் மழைநீர் வடிந்துள்ளது. குடிநீர் பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது. காற்று மாசை குறைப்பதற்காக அதிகமாக மரக்கன்றுகள் நடும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மக்களின் எதிர்பார்ப்புகள்**

தூத்துக்குடியின் பிரதான பிரச்சினையாக போக்குவரத்து நெரிசல் உள்ளது. இந்த பிரச்சினைக்கு தீர்வு காண 1, 2 மற்றும் 4வது ரயில்வே கேட் பகுதிகளில் மேம்பாலம் அமைக்க வேண்டும். விவிடி சந்திப்பில் மேம்பாலம் அமைக்க வேண்டும். முக்கிய சந்திப்பு பகுதிகளில் உள்ள சிக்னல்களை அகற்றி ரவுண்டானாக்கள் அமைக்க வேண்டும்.

மீன்பிடித் துறைமுகத்தை நவீனமயமாக்க வேண்டும். திரேஸ்புரத்தில் உள்ள தூண்டில் பாலத்தை முழுமையாக அமைக்க வேண்டும். தூத்துக்குடியில் அரசு சட்டக்கல்லூரி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டும்.

உப்பு உற்பத்தி அவ்வப் போது மழையால் பாதிக்கப்படும் போது, அரசு நிவாரணம் வழங்க வேண்டும், தூத்துக்குடியில் இருந்து சென்னைக்கு கூடுதல் ரயில் இயக்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகள் தூத்துக்குடி தொகுதி மக்களின் எதிர்பார்ப்புகளாக உள்ளன.

கடந்த 2021ம் ஆண்டு நடந்த தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட்ட பி.கீதாஜீவன் 92,314 வாக்குகள் பெற்றார். இவரை எதிர்த்து அதிமுக கூட்டணி சார்பில் போட்டியிட்ட தமாகா வேட்பாளர் எஸ்.டி.ஆர்.விஜயசீலன் 42,004 வாக்குகளை பெற்றார். கீதாஜீவன் 50,310 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

**4 முனை போட்டி**

இந்த தேர்தலில் திமுக கூட்டணி சார்பில் மீண்டும் பி.கீதாஜீவனே போட்டியிடுகிறார். இவர் இந்த தொகுதியில் 5 வது முறையாக களம் காண்கிறார். ஏற்கெனவே மூன்று முறை வென்றுள்ளார். ஒரு முறை வெற்றி வாய்ப்பை இழந்துள்ளார்.

கடந்த 2016 மற்றும் 2021 தேர்தல்களில் தொடர்ச்சியாக வென்ற கீதாஜீவன் தற்போது ஹாட்ரிக் வெற்றி வாய்ப்புக்காக தீவிர களப்பணியாற்றி வருகிறார். அவருக்கு எதிராக அதிருப்தி அலை எதுவும் பெரிதாக இல்லை. கூட்டணியும் அவருக்கு மிகப்பெரிய பலமாக உள்ளது.

அவரை எதிர்த்து அதிமுக வேட்பாளர் சி.த.செல்லப்பாண்டியன் போட்டியிடுகிறார். இவர் கடந்த 2011 தேர்தலில் இந்த தொகுதியில் வெற்றி பெற்று அமைச்சராக பணியாற்றினார். 2016 தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

கடந்த 2021 தேர்தலில் கூட்டணி கட்சியான தமாகாவுக்கு இந்த தொகுதி ஒதுக்கப்பட்ட நிலையில், இந்த முறை அதிமுக நேரடியாக களம் காண்கிறது. சி.த.செல்லப்பாண்டியனே மீண்டும் போட்டியிடுகிறார். தூத்துக்குடி தொகுதியை பொறுத்தவரை அதிமுகவுக்கு என வலுவான வாக்கு வங்கி உள்ளது.

நாம் தமிழர் கட்சி சார்பில் ஆர்.ஜேக்கப் தேவதாஸ் அபிஷேக் களம் காண்கிறார். கடந்த 2021 தேர்தலில் இத்தொகுதியில் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி வேட்பாளர் வேல்ராஜ் 30,937 வாக்குகள் பெற்றுள்ளார்.

இந்த தேர்தலிலும் நாம் தமிழர் கட்சி கணிசமான வாக்குகளை பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. தவெக சார்பில் நடிகர் விஜய்யின் நண்பரும், திரைப்பட நடிகர் மற்றும் இயக்குநருமான ஸ்ரீநாத் போட்டியிடுகிறார். அதிமுக முன்னாள் அமைச்சர் ஜி.ஆர்.எட்மண்டின் சகோதரி மகனான இவர் நடிகர் சந்திரபாபுவின் நெருங்கிய உறவினர் ஆவார்.

சிறுபான்மையினர் வாக்குகள், குறிப்பாக கடற்கரை கிராம வாக்குகள் மற்றும் திமுக, அதிமுக மீதான அதிருப்தி வாக்குகள் தவெக வேட்பாளருக்கு கைகொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் தூத்துக்குடி தொகுதியில் 4 முனை போட்டி நிலவுகிறது. தேர்தலுக்கு இன்னும் 13 நாட்கள் உள்ள நிலையில் வேட்பாளர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.



# "மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்தால் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இருக்காது" -குஷ்பு

மதுரை, ஏப்.12-
''இரண்டு பெண் குழந்தைகளுக்கு தாயாக உள்ள நான் சொல்கிறேன். தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்தால் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இருக்காது,'' என்று திருப்பரங்குன்றம் அதிமுக வேட்பாளர் விவி.ராஜன் செல்லப்பாவை ஆதரித்து பேசிய தமிழக பாஜக துணைத் தலைவர் குஷ்பு தெரிவித்தார்.

திருப்பரங்குன்றம் அதிமுக வேட்பாளர் வி.வி.ராஜன் செல்லப்பாவை ஆதரித்து, குஷ்பு திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சிந்தாமணி, மேல அனுப்பானடி உள்ளிட்ட பகுதிகளில் பிரச்சாரம் செய்தார். பொதுமக்கள், அதிமுகவினர், அதிமுக வேட்பாளர் ராஜன் செல்லப்பாவிற்கும், நடிகை குஷ்புவிற்கும் பூக்கள் தூவியும், ஆரத்தி எடுத்தும் உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்,

குஷ்பு பிரச்சாரத்தில் பேசியதாவது: கடந்த ஐந்து ஆண்டுகளாக மதுரைக்கு எந்த வேலைவாய்ப்பு, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களைக் கொண்டு வராத திமுகவினர் எந்த முகத்தை வைத்து மக்களிடம் ஓட்டு கேட்டு வருகிறார்கள். எய்ம்ஸ், நீட் தேர்வு, பெண் குழந்தைகள் பாதுகாப்பு, போதைப்பொருள் நடமாட்டம் தடுப்பு என கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. பெண் குழந்தைகள் நிம்மதியாக வெளியே போய்விட்டு வீட்டுக்கு திருப்பி வர முடிகிறதா? ஐந்து நிமிடங்கள் தாமதமானால் பெற்றோர்கள் மனதில் திக் திக் என்று அடிக்கிறது. நானும் இரண்டு பெண் குழந்தைகளுக்கு தாயாக இருக்கிறேன். அதனாலேயே இதைச் சொல்கிறேன்.

அந்த அளவுக்கு தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு போய் உள்ளது. உலகில் மிகச் சிறந்த தலைவர் யார் என்று கேட்டால் மோடி என்கிறார்கள். கடைசி ஐந்தாவது இடத்தில் இருந்த இந்தியா உலக அரங்கில் முன்னனி இடம் ஆரம்பித்துள்ளது.

மதுரையில் திமுகவினர் ஊழல் முறைகேட்டில் ஈடுபட்டு பதவிகளை இழந்துள்ளனர். போலீஸாரால் கைதும் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழக மக்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்றால், நிம்மதி கிடைக்க வேண்டுமென்றால், பெண் குழந்தைகள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றால் திமுக ஆட்சியை வீட்டிற்கு அனுப்ப வேண்டும். பாதுகாப்பை வழங்கி மக்கள் நிம்மதியாக வாழ அதிமுக ஆட்சிக்கு மீண்டும் வர வேண்டும்.

பஸ்ஸில் பெண்கள் இலவச பயணத்தை பார்த்து திமுக அமைச்சர் 'ஓசில தான் போறீங்க...' என கிண்டல் செய்கிறார்.

இன்னொரு அமைச்சர் பெண்களை இழிவாகப் பேசுகிறார். பெண்கள் என்றால் அவ்வளவு இழிவாகப் போச்சா உங்களுக்கு. பெண்களைப் பார்க்க அவ்வளவு கேவலமாக உள்ளதா? பெண்கள் ஆசைப்பட்டு சம உரிமை. பெண்கள் ஆசைப்பட்டது சம மரியாதை. பழனிசாமி பெண்களுக்கு மட்டுமில்லை, ஆண்களுக்கும் இலவச பயணம் என்று கூறி விட்டார். அதனால், இனி வீட்டில் ஆண்கள், பெண்கள் சேர்ந்து பஸ்ஸில் இலவசமாக பயணம் செய்யலாம். அதிமுகவுக்கு வாக்களித்தால் நிச்சயமாக மக்கள் வாழ்க்கை தரம் உயரும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# ராயக்கோட்டை வட்டாரத்தில் புளி உற்பத்தி பணியில் பெண் தொழிலாளர்கள் மும்முரம்

ராயக்கோட்டை, ஏப்.12-
ராயக்கோட்டை சுற்றுவட்டார பகுதியில் சீசன் காரணமாக புளிய மரங்களில் இருந்து பழங்களை பறித்து, ஓடுகளை நீக்கி சுத்தப்படுத்தி விற்பனைக்கு அனுப்பும் பணியில் பெண்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோடை சீசன் காலங்களில் புளி உற்பத்தியில் விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் புளியம் பழங்களை மரங்களில் இருந்து உலுக்கி பறித்து எடுத்து வந்து வெயிலில் காயவைத்து, தென்னை மட்டைகளை கொண்டு பதமாக தட்டி, ஓடுகளை நீக்கிய பின்பு, கொட்டைகளை அகற்றி விற்பனைக்கு அனுப்பி வைக்கின்றனர்.

இங்கிருந்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும், கேரளம் மற்றும் வடமாநிலங்களுக்கும் புளி விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. ராயக்கோட்டை பகுதியில் உள்ள புளி வியாபாரிகள், பட்டை தட்டி நீக்கிய புளியை மொத்தமாக கொள்முதல் செய்து, கட்டுப்படியான விலை கிடைப்பதற்காக ஏ.சி. குடோன்களில் இருப்பு வைக்கின்றனர். பின்னர், தேவை அதிகரிக்கும்போது குடோன்களில் இருந்து புளியை எடுத்து விற்பனைக்கு அனுப்புகின்றனர்.

100 நாள் வேலை மற்றும் வெளியூர்களில் உள்ள தொழிற்சாலைகள், நூற்பாலை வேலைக்கு பெண்கள் செல்வதால், தற்போது புளி சுத்தப்படுத்தும் பணிக்கு ஆட்கள் கிடைப்பதில்லை.

இதனால், வேறு வழியின்றி கூடுதல் கூலி கொடுத்து, புளி சுத்தப்படுத்தும் பணியில் பெண்களை ஈடுபடுத்தி வருகின்றனர். தற்போது, சீசன் என்பதால் புளி சுத்தப்படுத்தும் பணி துவங்கி மும்முரமாக நடந்து வருகிறது என வியாபாரிகள் தெரிவித்தனர்.

# யமுனை நதியில் படகு கவிழ்ந்து 10 பக்தர்கள் உயிரிழப்பு

உத்தரப் பிரதேச மாநிலம் மதுராவில் நேற்று மதியம் யமுனை நதியில் பக்தர்கள் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், சிறார்கள் உட்பட 10 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். காணாமல் போனவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.



இதுகுறித்து மதுரா மாவட்ட ஆட்சியர் சி.பி. சிங் செய்தியாளர்களிடம் கூறியதாவது: பஞ்சாப் மாநிலம் லூதியானாவிலிருந்து சுமார் 30 பேர் கொண்ட பக்தர்கள் குழுவினர் மதுராவுக்கு வருகை தந்தனர். வெள்ளிக்கிழமை (நேற்று) மதியம் 2:45 மணியளவில் அவர்கள் இரண்டு படகுகளில் யமுனை நதியில் பயணம் செய்தபோது, கேசி படித்துறை அருகே எதிர்பாராதவிதமாக ஒரு படகு நதியில் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானது.

இதில், சிறுவர்கள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர். அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. நீரில் தத்தளித்த 17 பேர் உயிருடன் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். யமுனை நதியில் நீரோட்டம் அதிகமாக உள்ளதால், காணாமல் போனவர்களைத் தேடும் பணியில் உள்ளூர் நீச்சல் வீரர்களும், பேரிடர் மீட்புப் படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

முதற்கட்ட விசாரணையில், படகில் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமான நபர்களை ஏற்றியதே விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. விபத்து நடந்த இடத்தில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

# கட்சித் தலைவர்களின் பிரச்சாரத்தை முன்கூட்டியே திட்டமிட டிஜிபி உத்தரவு

சென்னை, ஏப்.12-
பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில், அரசியல் தலைவர்களின் பிரச்சாரத்தை முன்கூட்டியே திட்டமிட வேண்டும் என அனைத்து மாவட்ட போலீஸ் அதிகாரிகளுக்கும் டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவிட்டுள்ளார்.



டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் தமிழகம் முழுவதும் உள்ள மண்டல ஐஜிக்கள், காவல் ஆணையர்கள், டிஐஜிக்கள், எஸ்பிக்களுடன் காணொலி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

அப்போது, தங்களது உயர் அதிகாரிகள் பிறப்பித்த உத்தரவுகளை மட்டுமே பின்பற்ற வேண்டும்.வெளியிலிருந்து வரும் தலையீடுகளை தவிர்க்க உத்தரவிட்டார். இதற்கிடையே, தேர்தல் பாதுகாப்பு தொடர்பாக சுற்றறிக்கை அனுப்பியிள்ளதாகக் கூறப்படுகிறது.

அதில், நட்சத்திர அரசியல் தலைவர்களின் பரப்புரை, மக்கள் பாதுகாப்பு குறித்து முன்கூட்டியே திட்டமிட வேண்டும், சுவிதா இணையதளம் வாயிலாக பிரச்சாரத்துக்கு அனுமதி கேட்பவர்களுக்கு உரிய நேரத்தில் அனுமதி கிடைக்கிறதா என்பதை கண்காணித்து பிரச்சாரம் நடும் பொதுக்கூட்டத்துக்கான பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும், வேட்பாளர்களின் பிரச்சாரங்களால் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு பார்க்க வேண்டும். மீறுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து தகவல்களையும் உயர் போலீஸ் அதிகாரிகளின், வழிகாட்டுதலோடு தேர்தல் ஆணையத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும், தேர்தல் ஆணையம் நடத்தும் அனைத்து ஆலோசனைக் கூட்டங்களிலும் தவறாது பங்கேற்க வேண்டும்.

இவ்வாறு சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதாக போலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஹுமாயூன் கபீர் போன்றவர்களுடன் கூட்டணி வைக்கமாட்டோம்: அமித் ஷா உறுதி

மேற்கு வங்கம் கொல்கத்தாவில் நேற்று பாஜகவின் தேர்தல் அறிக்கையை மத்திய அமைச்சர் அமித் ஷா வெளியிட்டார். அப்போது, ஆம் ஜனதா உன்னயன் கட்சித் தலைவர் (ஏஜேயுபி) ஹுமாயூன் கபீருடன் பாஜக மறைமுகக் கூட்டணி வைத்துள்ளதாகக் கூறப்படுகிறதே என்று நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு மத்திய அமைச்சர் அமித் ஷா கூறியதாவது: பாஜ கட்சியின் கொள்கைகள், சித்தாந்தங்கள் வேறு, ஆம் ஜனதா உன்னயன் கட்சியின் கொள்கைகள், சித்தாந்தங்கள் வேறு.

மேற்கு வங்கத்தில் பாபர் மசூதியைக் கட்டுவேன் என்று கூறி பிரபலமானவர் ஹுமாயூன் கபீர். நாங்கள் மேற்கு வங்கத்தில் 20 ஆண்டுகளுக்கு எதிர்க்கட்சியாக வேண்டுமானாலும் அமர்வோம். ஹுமாயூன் கபீர் போன்றவர்களுடன் கூட்டணி வைக்க மாட்டோம்.

ஹுமாயூன் கபீரும், பாஜகவும் தென் துருவம், வடதுருவம் போன்றது. எப்போதுமே ஒன்று சேர்ந்து கூட்டணி வைக்க முடியாது. இவ்வாறு அவர் தெரிவித்தார். திரிணமூல் காங்கிரஸ் தலைவரும், முதல்வருமான மம்தா பானர்ஜியை தேர்தலில் தோற்கடிக்க, பாஜக தலைவர்கள் ஹுமாயூன் கபீருடன் மறைமுகக் கூட்டணி வைத்துள்ளனர் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதை தற்போது அமித் ஷா மறுத்துள்ளார்.

# 'ஜனநாயகன்' படம் இணையத்தில் வெளியாக உதயநிதி, எல்.முருகன் தான் காரணம்: ஆதவ் அர்ஜுனா குற்றச்சாட்டு

சென்னை, ஏப்.12-
'ஜனநாயகன்' திரைப்படம் இணையத்தில் கசிந்ததற்குத் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும், மத்திய அமைச்சர் எல். முருகனும்தான் காரணம் என தவெக தேர்தல் மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா குற்றம்சாட்டியுள்ளார்.



விஜய் நடிப்பில், ஹெச்.வினோத் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'ஜனநாயகன்'. பூஜா ஹெக்டே, மமிதா பைஜு, பிரியாமணி உள்ளிட்ட பலர் நடித்துள்ள இப்படம், இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஜனவரி 9ம் தேதி வெளியாகத் திட்டமிடப்பட்டது. விஜய்யின் கடைசிப் படம் என்பதால் படத்திற்குப் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. எனினும், படத்தின் சில காட்சிகளுக்குத் தணிக்கைக் குழு ஆட்சேபம் தெரிவித்ததால், வெளியாவதில் தொடர்ந்து சிக்கல் நீடித்து வந்தது.

இதற்கிடையில் விஜய் முழுநேரத் தேர்தல் களத்தில் இறங்கியதால், இப்படம் தேர்தலுக்குப் பிறகுதான் வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது. இத்தகைய சூழலில், சில நாட்களுக்கு முன்பு படத்தின் ஆரம்பக் காட்சிகள் மற்றும் பாடல்கள் இணையத்தில் வெளியாகிப் படக்குழுவை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அதன் தொடர்ச்சியாக, தற்போது முழுத் திரைப்படமுமே இணையத்தில் கசிந்திருப்பது தவெக தொண்டர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்துச் செய்தியாளர்களிடம் பேசிய ஆதவ் அர்ஜுனா கூறியதாவது: ஒரு திரைப்படம் வெளியாவதற்கு முன்பாக அது சாட்டிலைட் கட்டுப்பாட்டில் இருக்கும். தற்போது சாட்டிலைட் பாஜகவின் வசமே உள்ளது. எனவே, திட்டமிட்டுப் படத்தை இணையத்தில் கசியவிட்டு, விஜய்க்கும் தயாரிப்பாளருக்கும் மிகப்பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தி மிரட்டியிருக்கிறார்கள். இதற்கு துணை முதல்வர் உதயநிதியும் மத்திய அமைச்சர் எல்.முருகனும்தான் காரணம். விஜய்க்கு எவ்வளவு பெரிய இழப்பை ஏற்படுத்தினாலும், தமிழக மக்களே அவருக்கு அரணாக இருப்பார்கள்.

தொடர்ந்து படத்தைத் திரையிட விடாமல் முட்டுக்கட்டைப் போடும் எல். முருகன், உதயநிதியின் செயல்களுக்குப் பின்னால் முதல்வர் ஸ்டாலின் மூளையாகச் செயல்படுகிறார். இன்னும் 10 நாட்களில் விஜய்யை எப்படியெல்லாம் தாக்க முடியுமோ, அவமானப்படுத்த முடியுமோ அத்தனையையும் போலிப் பிரச்சாரங்கள் மூலம் செய்வார்கள். ஆனால், மக்கள் அவரது கண்ணீருக்குத் தேர்தல் வெற்றி மூலம் பதில் தருவார்கள்.

அன்று எம்ஜிஆருக்கு திமுக மிகப்பெரிய நெருக்கடியைக் கொடுத்தது. மதுரையில் அவரது திரைப்படப் பெட்டிகளை திமுகவினர் தூக்கிச் சென்ற வரலாறும் உண்டு. இன்று அதையே சாட்டிலைட் தொழில்நுட்பம் மூலம் நவீனமாகச் செய்கிறார்கள். இதற்கு மக்கள் தேர்தலில் தக்க பதிலடி கொடுப்பார்கள். கரூரில் 41 பேர் உயிரிழந்ததற்கு முதல்வர் ஸ்டாலின், உதயநிதி மற்றும் மகேஷ் பொய்யாமொழிதான் பொறுப்பு. அன்று முதல் மக்கள் இவர்களைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதனால்தான் இப்போது தவெகவிற்குப் மிகப்பெரிய மக்கள் எழுச்சி ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.



■ மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ள வலையபட்டி ஸ்ரீ மஞ்சமலை அய்யனார் திருக்கோவிலில், சோழவந்தான் தொகுதியின் சுயேச்சை வேட்பாளர் குணசேகரன் நிர்வாகிகளுடன் சென்று சுவாமி தரிசனம் செய்தார்.பின்னர் கிரிக்கெட் பேட் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.



## அந்தியூர் பகுதியில் சிப்காட் தொழில் பூங்கா அமைக்கப்படும் உடுமலையில் திமுக சட்டமன்ற தொகுதி வேட்பாளர் மு.ஜெயக்குமார்

திருப்பூர், ஏப்.12-

திருப்பூர் மாவட்டம் உடுமலை நகரில் உடுமலை சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் மூ ஜெயக்குமார் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் உடன் உடுமலை நகரக் கழக செயலாளர் வேலுச்சாமி, உடுமலை நகர மன்ற தலைவர் மு மத்தின், பொதுக்குழு உறுப்பினர் யூ.என்.பி. குமார், உடுமலை நகர மன்ற துணைத் தலைவர் கலைராஜன் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் விக்ரம் உடுமலை நகர மன்ற உறுப்பினர்கள் கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள் உடன் இணைந்து உதயசூரியன் சின்னத்திற்கு வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தார்கள்.

உடுமலை தொகுதி திமுக வேட்பாளர் ஜெயக்குமார் பேசும்பொழுது அந்தியூர் பகுதியில் அரசு நிலத்தில் தொழில் பூங்கா சிப்காட் அமைக்கப்படும். பழனி யாண்டவர் ரவுண்டானா பகுதி அருகில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டி தரப்படும் உடுமலை நகரப் பகுதி மற்றும் உடுமலை சட்டமன்ற தொகுதி முழுவதும் அனைத்து துறைகளிலும் வளர்ச்சி அடைந்த சட்டமன்ற தொகுதியாக மாற்றம் செய்வேன் என சூளுரைத்தார்.



■ திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் அப்பாவு அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை கேட்டு திசையன்விளை திமுகவினர் மற்றும் காங்கிரஸ்காரர்கள் பிரச்சாரம். நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட திமுக மகளிர் அணி தலைவரும் திசையன்விளை பேரூராட்சி மன்ற கவுன்சிலருமான கமலா சுயம்பு ராஜன் முன்னாள் காங்கிரஸ் நகரத் தலைவர் ராஜன் மாவட்ட துணைத் தலைவர் விஜய பெருமாள் மாவட்ட இணைச் செயலாளர் ஐசக் வார்டு தலைவர் முருகன் உட்பட பலர் கலந்து கொண்டு பிரச்சாரம் செய்தனர்.



■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் பேரூராட்சி, குறவன்குளம் கிராமத்தில் அமைந்துள்ள வடசீமை சீமானூர் வகையறாவுக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ மதுரைவீரன் சுவாமி மற்றும் பரிவார தெய்வங்களின் திருக்கோவில் 48ஆம் நாள் மண்டல அபிஷேக விழா நடைபெற்றது. சிறப்பு யாகசாலை பூஜையில் மங்கள இசை முழங்க பல்வேறு சிறப்பு ஹோமங்கள் மஹா பூர்ணாஹிதி தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து சீமானூரர் மண்டபத்தில் சிறப்பு அபிஷேகம் அதனை தொடர்ந்து யாகசாலையில் இருந்து கடம் புறப்பாடாகி அழகர்கோவில், ராமேஸ்வரம் உள்ளிட்ட புனித தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனிதநீர் கோவிலை சுற்றி வலம் வந்து பின் சுவாமி சிலைகள் மீது ஊற்றப்பட்டு மண்டல அபிஷேக விழா நடைபெற்றது. தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை பேரூராட்சி கவுன்சிலர் கலை அரசன் மற்றும் ஸ்ரீ மதுரைவீரன் திருக்கோவில் திருப்பணி குழுவினர் செய்திருந்தனர்.

## "முதல்வரின் திறன் பற்றி ஆ.ராசா பேச்சு எங்கள் பிரச்சாரத்துக்கு கூடுதல் பலம்" அண்ணாமலை கருத்து

முதல்வரின் திறன் பற்றியும், 2ஜி வழக்கு பற்றியும் ஆ.ராசா ஒரு ஆடியோவில் பேசியுள்ளது எங்களுடைய பிரச்சாரத்துக்கு இன்னும் கூடுதல் பலம் சேர்த்துள்ளது என தமிழக பாஜக தேசிய பொதுக்குழு உறுப்பினர் அண்ணாமலை தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டம் ஊட்டி சட்டப்பேரவைத் தொகுதி பாஜக வேட்பாளர் மு.போஜராஜனை ஆதரித்து பிரச்சாரம் செய்ய அண்ணாமலை நேற்று காலை கோவையில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் ஊட்டி வந்தார். தீட்டுக்கல் ஹெலிகாப்டர் தளத்தில் அவர் வந்து இறங்கியதும், அங்கு தயாராக நின்ற தேர்தல் பறக்கும் படையினர், ஹெலிகாப்டரை சோதனையிட்டனர்.

பின்னர் அண்ணாமலை செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஊட்டி சட்டப்பேரவைத் தொகுதியில் கடந்த முறை சில ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில்தான் வெற்றி வாய்ப்பை இழந்தோம். அதன் பிறகு ஐந்து ஆண்டு காலம் மிக கடுமையாக உழைத்திருக்கிறோம். அதிமுக தலைவர்கள், தொண்டர்கள் எல்லாம் முழு ஒத்துழைப்பை நல்கி, இந்த முறை நிச்சயமாக ஊட்டியில் போஜராஜனுக்கு வெற்றி வாய்ப்பு கிடைக்கும் என்று முழுமையாக நம்புகிறோம். காங்கிரஸ் கட்சிக்கு இரண்டு முறை இங்கு மக்கள் வாய்ப்பு கொடுத்தனர். ஆனால், எந்தவிதமான அடிப்படை வசதியும் செய்யவில்லை.

புதுச்சேரியில் 91 சதவீதம் வாக்குப் பதிவாகியுள்ளது. அசாமிலும் மிக அதிகமான வாக்குப்பதிவு. காரணம் எஸ்ஐஆர் மூலமாக போலி வாக்குகள் நீக்கப்பட்டிருப்பது இயற்கையாகவே வாக்கு சதவீதத்தை அதிகப்படுத்தியிருக்கிறது.

மே 4ம் தேதிக்கு பிறகு பழனிசாமி முதலமைச்சராக பொறுப்பேற்கும்போது தமிழகம் முழுவதும் ஒரு எழுச்சியான சூழல் உருவாகும். தமிழக வெற்றிக் கழகம் மற்றும் சீமான் களத்தில் இருந்தாலும், தேர்தல் என்று வந்துவிட்டால் அது இருமுனைப் போட்டியாகத்தான் இருக்கும். ஒன்று ஆளும் திமுக, மற்றொன்று அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி.

முதல்வர் ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி கருத்தை தவறான ஒரு சூழலில் பேசுகிறார். கனிமொழி எங்களை யாராவது எதிர்த்துப் பேசினால் 'மலர் வளையம்' வைப்போம் என்று கூறுகிறார். இது மிரட்டல் இல்லையா? மேலும், நட்சத்திரப் பேச்சாளராக இருக்கும் ஆ.ராசா இதுவரை திமுகவின் ஒரு கூட்டத்தில் கூட பங்கேற்கவில்லை. ஒரு ஆடியோவில் அவர் முதல்வரின் திறன் பற்றியும், 2ஜி வழக்கு பற்றியும் ஆ.ராசா பேசியுள்ளது தமிழக மக்கள் அனைவருக்கும் தெரியும். இது எங்களுடைய பிரச்சாரத்துக்கு இன்னும் கூடுதல் பலம் சேர்த்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## "சுந்தர்.சி ஒரு 'சினிமா சங்கி', ஏனெனில்..." அமைச்சர் பிடிஆர் விவரிப்பு

மதுரை, ஏப்.12-

"சுந்தர்.சி 11ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர் என்பதால், அவருக்கு எதையும் படித்துப் புரிந்துகொள்ளும் அறிவு இல்லை" என்று மதுரை மத்திய தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் காட்டமாக பேசியுள்ளார். மேலும், சுந்தர்.சியை 'சினிமா சங்கி' என்று அவர் குறிப்பிட்டார். மதுரை மத்திய தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கிரம்மர்புரம், முரட்டன் பத்திரி உள்ளிட்ட இடங்களில் பொதுமக்களைச் சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.



அப்போது அவர் பேசியது: "எனது அரசியல் வாழ்க்கையில் எப்போதும் கட்சியின் கொள்கை, செயல்பாடு, ஆட்சியில் செய்த மற்றும் செய்யப்போகும் திட்டங்கள் சாதனைகள் பற்றியே பேசியுள்ளேன். என்னை எதிர்த்து நின்ற வேட்பாளர்கள் குறித்து நான் எந்த ஒரு வார்த்தைகூட தவறாக பேசியது இல்லை. அவர்களும் என்னை பற்றி தவறாக பேசியது இல்லை.

ஆனால், மதுரை மத்திய தொகுதியில் புதிய நீதிக் கட்சி சார்பில் அதிமுகவின் இரட்டை இலை சின்னத்தில் வேட்பாளராக நடிப்பதற்காக 'சினிமா சங்கி' ஒருவர் நிறுத்தப்பட்டுள்ளார். இவருக்கும் மதுரைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஆனால், இவரது தயாரிப்பாளரான புதிய நீதிக் கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம் இவரை வேட்பாளராக நடிப்பதற்காக களம் இறக்கியுள்ளார்.

இந்த வேட்பாளரின் மனைவி, ஜிம்னாஸ்டிக் சாம்பியன் போன்று கடந்த 15 20 ஆண்டுகளில் திமுக, காங்கிரஸ், பாஜக என மூன்று கட்சிகள் தாவியவர். தற்போது, நான்காவது முறையாக ஏ.சி. சண்முகத்தின் கட்சி வழியாக, 5ஆவது கட்சியாக இவரது கணவரை அதிமுகவில் போட்டியிட வைத்துள்ளார். அந்த வேட்பாளர், தான் வெற்றி பெற்றால் மதுரையில் வெறும் 15 நாட்கள் மட்டுமே இருப்பேன் என்று வெளிப்படையாகவே கூறுகிறார். ஏன் அவரை 'சினிமா சங்கி' என கூறுகிறேன் என்றால், அவர் வந்தவுடன் முதலில் சென்றது ஆர்எஸ்எஸ் அலுவலகம்தான். அவருக்கு மதுரையைப் பற்றி எந்த புரிதலும் இல்லாமல், இயக்குநர் பார்த்திபன் குமார் என்பவர் கற்றுக்கொடுத்தபடி, எல்லா இடத்திலும் "இது சரியில்லை" என்ற வார்த்தையை மட்டுமே பேசி வருகிறார். குறிப்பாக, மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்றால், மன அமைதி கிடைக்கும் என்றுதான் மதுரை மக்கள் கூறுவர். ஆனால், இந்த வேட்பாளர் சென்றால், பார்த்து அழுகை வருவதாக கூறுகிறார். அவர், கோயில் வரலாற்றைப் படிக்க வேண்டும். கடந்த 2018ம் ஆண்டு, அதிமுக ஆட்சியில் கோயிலில் உள்ள வீரவசந்தராயர் மண்டபத்தில் தீ விபத்து ஏற்பட்டது. அதன்பிறகு அந்த மண்டபத்தை சீரமைக்க அவர்கள் ஆட்சியில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. திமுக ஆட்சி 2021ல் அமைந்த பின்னர். ரூ.35 கோடி மதிப்பீட்டில் 20 அடி உயர 70 கல் தூண்கள் ஆந்திரா, தெலங்கானா உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கற்கள் கொண்டுவரப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. வரும் செப்.17ம் தேதி கோயில் குடமுழுக்கு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதையெல்லாம் தெரிந்துகொண்டு பேசவேண்டும்.

மேலும், கழிப்பறை வசதியில்லை என அவர் கூறியுள்ளார். ஆனால், நான் வெற்றிபெற்ற பின்னர், 3 மடங்கு கூடுதலாக கழிப்பறைகள் கட்டியுள்ளேன். இது தெரியாமல் அவர் குறை கூறுகிறார். இந்த வேட்பாளர் 11ஆம் வகுப்பு வரை மட்டுமே தேர்ச்சி பெற்றவர், என்பதால் எதையும் படித்துப் புரிந்துகொள்ளும் அறிவு இல்லை. மதுரையின் சாக்கடைப் பிரச்சினைக்கு ரூ.3,500 கோடி திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, ரூ.400 கோடி நிதி ஒதுக்கி பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்று அவர் பேசினார்.

"நான் மதுரைக்காரன்டா!" மேலும், அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பேசுகையில், ''சுந்தர்.சி மனைவி முன்னதாக ஆந்திராவில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில், மாநகர மக்கள் மீது குப்பைக்கு என தனி வரி விதிக்க வேண்டும் என பேசினார். அவர் அன்று பேசியது இப்போது புரிகிறது. எம்எல்ஏ ஆகிவிட்டால் குப்பை டெண்டர் எடுக்கலாம் என திட்டமிட்டுதான் அவ்வாறு பேசியுள்ளார். இந்த தீய சக்திகள் திரும்ப திரும்ப பொய்யை கூறி வருவதால் இதெல்லாம் பேசவேண்டியுள்ளது. இவரை வைத்து மாநில அளவில் பெரிய நாடகத்துக்குத் தயார்படு த்துகின்றனர்.

கபட நாடகம் போட்டு கூத்தாடும் தனி நபர்களை மதுரை மக்கள் ஏற்றுக்கொள்வதில்லை. அவர்கள் டெபாசிட் இழக்கச் செய்யவேண்டும். நான் மதுரைகாரன்டா என நெஞ்சை நிமிர்த்தி சொல்வேன். ஒரு கை பார்த்துக்கொள்வோம்" என்றார்.

## "இலவசங்களை அறிவிக்கும் கட்சிகள் அதற்கான நிதி குறித்து விளக்க வேண்டும்" வெங்கய்ய நாயுடு

சென்னை, ஏப்.12-

இலவசங்களை அறிவிப்பவர்கள் அதற்கான நிதி குறித்து மக்களுக்கு விளக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள வெங்கய்ய நாயுடு, மக்களும் இது குறித்து கேள்வி எழுப்ப வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.



சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற குடியரசு முன்னாள் துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு, பின்னர் செய்தியா ளர்களிடம் பேசினார். அப்போது அவர், "ஒரு மனிதனுக்கு மீனை கொடுப்பதைவிட மீன் பிடிக்க கற்றக்கொடுக்க வேண்டும் என்ற ஒரு பழமொழி உண்டு. தொடர்ந்து இலவசங்களை கொடுத்துக்கொண்டே இருந்தால் மக்கள் மேலும் பலவற்றை எதிர்பார்க்கத் தொடங்குவார்கள். இதைத்தான் நான் நிகழ்ச்சியில் பேசும்போதும் தெரிவித்தேன். நான் எந்த ஒரு மாநிலத்தையும் குறிப்பிடவில்லை. இது நாடு முழுவதுமே நடக்கிறது.

இதை கருத்தில் கொண்டு ஒவ்வொரு அரசும் மக்களின் கல்வி மற்றும் சுகாதாரத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அரசால் வழங்க முடியும் என்றால் இலவசங்களைக் கொடுக்கலாம். அதே நேரத்தில், இலவசங்கள் குறித்த வாக்குறுதிகளை அளிப்பது அது எந்த கட்சியாக இருந்தாலும், எந்த மாநிலமாக இருந்தாலும், எந்த அரசாங்கமாக இருந்தாலும் அவர்கள், அதற்கான நிதி ஒதுக்கீடு குறித்த திட்டத்துடன் வாக்குறுதிகளை அளிக்க வேண்டும். நிதிநிலை அறிக்கை இல்லாமல், மாநிலத்தின் நிதி நிலைமை குறித்த புரிதல் இல்லாமல் இன்னும் இன்னும் இலவசங்கள் அறிவிக்கப்படுமானால் மக்கள் கேள்வி எழுப்ப வேண்டும். அது எந்தக் கட்சியாக இருந்தாலும் அதனிடம் கேள்வி கேட்க வேண்டும்.

இலவசங்கள் அறிவிக்கிறீர்களே, அதற்கான நிதிக்கு என்ன செய்யப் போகிறீர்கள்? எவ்வாறு பட்ஜெட்டை திட்டமிடப் போகிறீர்கள்? எவ்வாறு நிதி திரட்டப் போகிறீர்கள்? என்ற கேள்விகளை மக்கள் கேட்க வேண்டும். இந்த விஷயத்தை நான் மிகவும் வலியுறுத்த விரும்புகிறேன்" என தெரிவித்தார்.

பெண்களுக்கான இட ஒதுக்கீடு தொடர்பாக சிறப்பு நாடாளுமன்ற அமர்வு கூட இருப்பது குறித்த கேள்விக்கு பதில் அளித்த வெங்கையா நாயுடு, "பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்றுவதற்காக நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நீட்டிக்கப்பட்டிருப்பதை நான் உறுதியாக வரவேற்கிறேன். ஏனெனில் இது நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த ஒரு திட்டம். மக்கள் தொகையில் பெண்கள் 50 சதவீதத்தை வகிக்கின்றனர். அவர்கள் சமூகத்தின் ஒருங்கிணைந்த அங்கமாகத் திகழ்வதோடு, நாட்டின் வளர்ச்சிக்கும் பங்களிக்க வேண்டியவர்கள் என்பதால், அவர்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்குவதில் எவ்விதச் சிக்கலும் இருக்கக்கூடாது.

இது ஒன்றும் புதிய சிந்தனை அல்ல; இது குறித்து முன்னரே விவாதிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்டும் உள்ளது. எனவே, தற்போது இம்சோதா முழுமையாக நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய, அவையின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய தருணம் இது"

## தொகுதி மறுவரையறை திட்டத்துக்கு இந்திய கம்யூனிஸ்ட் கண்டனம்

சென்னை, ஏப்.12-

இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்ட அறிக்கை: இந்தியாவில் 5 மாநிலங்களில் சட்டப்பேரவை தேர்தல்கள் நடக்கின்றன. இதனால், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.



இந்நிலையில், தொகுதி மறுவரையறையை நாடாளுமன்றத்தில் அவசர, அவசரமாக கொண்டுவர மத்திய அரசு முயற்சிக்கிறது.

தென்னிந்தியாவின் குரல்வளையை நசுக்குவதற்கு அவசரம் காட்டும் மத்திய அரசின் ஜனநாயக விரோதப்போக்கு கடும் கண்டனத்துக்குரியது.

2021 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், தொகுதி மறுவரையறை செய்யப்பட்டால், வடமாநிலங்களின் தொகுதி எண்ணிக்கை இரட்டிப்பாகிவிடும்.

தென்மாநிலங்களின் தொகுதி எண்ணிக்கை 24 விழுக்காடாக தேங்கிவிடும். இத்தகைய முயற்சியை மத்திய அரசு உடனடியாகக் கைவிட வேண்டும்.













SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000